1969 மார்ச் 11]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) தலைவர் அவர்களே, இத் துறையில் சில அபிவிருத்திகளைச் செய்யும் யோசனை பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. விநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையிலே அபிவிருத்திகளைச் செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல் கிறார்களே, இந்தத் துறை ஏற்கெனவே வேலை செய்கிற நேரத்தில் என்ன குறைபாட்டை அரசு கண்டது ? அந்தக் குறைபாட்டை நிவர்த்திக்க அரசு என்ன யோசனையை வைத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த யோசனையை இப்போது விளக்குவதற்கு இல்லை. இதை விரிவாக்க வேண்டு மென்பதில் அரசு நாட்டம் செலுத்தியிருக்கிறது. குறைகள் என்ன என்ன என்பது பற்றி கேட்டார்கள். என்ன என்ன குறைகள் என்பதை இப் போது விளக்க முடியாது. பரந்த அளவில் குற்றச்சாட்டுகள் இருக்கும் போது, சமுதாயத்தை அந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்க வேண்டு மென்று அரசு விரும்புகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே பொருள்பற்றிய அடுத்த கேள்வியையும் இப்போது எடுத்துக்கொள்ளலாம்.

* 267 வினா.—**திரு. பெ. மலைச்சாமி, திரு. வை. சுவாமிநாதன் :** } மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1967–68 மார்ச் வரை எத்தனை அதிகாரிகள் மீது லஞ்ச ஊழல் வழக்குகள் தொடுக்கப்பெற்றன ?

(இ) இவர்களில் அரசிதழ் பதிவு பெற்றவர்கள், பதிவு பெறாதவர் களின் எண்ணிக்கை என்ன ?

(உ) எத்தனை வழக்குகள் வெற்றிபெற்றன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 30 அதிகாரிகள் மீது வழக்குகள் தொடுக்கப்பெற்றன.

(இ) 8 அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் 22 அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகள் (13 தனிப்பட்ட நபர்களும் தொடர்பு கொண்டுள்ள னர்).

(உ) 4 வழக்குகள் வெற்றி பெற்றன.

திரு. எஸ். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளாக இருப்பவர்கள் போலீஸ் துறையைச் சேர்ந்தவர் களாக இருப்பதால் அதை மாற்றி, தனியாக ஒரு ஐ.ஏ.எஸ். ஆபீசர் அளவில் இயங்கும்படியான முறையில் தனியாக ஒரு குழுவை ஏற்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இவைகளை யெல்லாம் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக நான் முதல் கேள்வியிலேயே பதில் சொன்னேன்.

Thiru B. VENKATASWAMY: May I know the names of officers and their designations ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வெளியிடு வதற்கு இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பு அதிகாரிகளுக்கு அதிகாரிகளின்மீது நடவடிக்கை எடுக்க அதிகாரம் இல்லையென்றும், அதனால் பல இடங்களில் பல பேர் தப்பித்துக்கொள் கிறார்கள் என்றும் புகார்கள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா ? வெளியே இருப்பவர்கள் அப்படிப்பட்ட புகார்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. வெளியிலே புகார்கள் இருப்பதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி இருந்தாலும் இல்லாவிட்டாலும், இந்தத் துறையை நல்ல முறையில் வலிவாக்கவும், விரிவாக்கவும் இந்த அரசு விரும்புகிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, இவர்கள் எல்லாம் என்ன என்ன காரியங்களுக்காக, குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனர் ? என்ன என்ன குற்றங்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்கள் மீது எடுக்கப்பட்ட குற்றச்சாட்டுகளையும், நடவடிக்கைகளையும் வெளியிடுவதற்கில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்சம் சம்பந்தமான கேஸ்களை பிடிக்கும்போது பொறிவைத்துத்தான் பிடிக்கிறார்கள். இதனால் பல சமயங்களில் நிரபராதிகளைப் பிடித்து தண்டித்து விடுகிறார்கள். ஆகவே, உண்மையில் லஞ்சம் கொடுப்பவர்களைப் பிடித்துத் தண்டிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கேஸ்களை பொறி வைத்தும் பிடிக்கிறார்கள் : வழக்குகள் தொடரப்பட்டும் பிடிக்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா : பேரவைத் தலைவர் அவர்களே, லஞ்ச ஒழிப்பை தீவிரப்படுத்த, அரசாங்கம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதிகாரிகள் தேர்ந்தெடுக்கும்போது, அந்த அதிகாரிகளின் சொத்துபற்றிய விவரங்களையும் பர்ஸனல் ஃபைலில் சேர்க்கும் உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. கே. போஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, 30 அதிகாரிகளின்மீது தொடரப்பட்ட வழக்குகளில் 4 வழக்குகள் வெற்றி பெற்றன என்று கூறினார்கள். நான்கு வழக்குகள் வெற்றி பெற்றன என்றால் மீதி வழக்குகள் தோல்வியடைந்தனவா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நான்கு வழக்குகள் வெற்றிபெற்றன என்றால், மீதி வழக்குகள் தோல்வியடைந்தனவா என்று உறுப்பினர் கேட்கிறார். புலனாய்விலே 16 வழக்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. விசாரணையில் 5 வழக்குகள் இருந்து வருகின்றன. கண்டுபிடிக்க முடியாதவை என்று கருதி கைவிடப்பட்ட வழக்குகள் 3, டிபார்ட்மெண்ட்டில் ஒன்றும், டிரிப்யூனலில் ஒன்றும் இருக்கின்றன.

Advertising Consultants for Government

*268 *Q.*—**Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have kept any private firm as their advertising consultants ?**

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

Thiru T. MARTIN : May I request the Hon. Minister to state the basis which Government adopts in selecting newspapers for giving their advertisements ?